<u>**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**</u>

<u>**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**</u>

எஸ்.டி.சி **எண் :224/2022**

**ம.சா. :1 (சௌமியா)**

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 17.02.2023**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி**

**1. எனது கணவர் பால் மாடு வைத்தும் வீட்டிற்கு முன்பகுதிக்கு சீட் போடும் தொழிலும் செயது வருகிறார். எதிரி எனது கணவரின் நண்பர் ஆவார். எனது கணவருக்கு மாதம் 15,000 வருமானம் வருகிறது. எனக்கு சுமார் 10,000 முதல் 15,000 வருமானம் வருகிறது. நான் வருமான வரி தாக்கல் செய்யவில்லை. நானும் எனது கணவரும் பேன் கார்டு வைத்துள்ளோம். என்னுடைய பேன் கார்டு எண் தெரியும் அந்த எண். ETWPM8710C ஆகும். இரண்டு ஆண்டுகாலமாக பேன் கார்டு பயன்படுத்தி வருகிறேன். வருடத்திற்கு ஒரு முறை வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியாது.**

2. **எதிரி காசோலை கொடுத்தார். நான்** 7,500 **ரூபாய் பணம் கொடுத்தேன். எதிரிக்கு கொடுத்த காசோலையின் எண்கள்.** 659380, 659381, 659383 **ஆகும். எதிரி மூன்று காசோலை தான் கொடுத்தார். என்னுடைய சட்ட அறிவிப்பில் எதிரி** 3 **காசோலைகள் வழங்கியதாகதான் தெரிவித்துள்ளேன். எனது கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. சின்னசாமி எனது சித்தப்பா தற்போது உள்ளார். எதிரி மின்சார வாரியத்தில் பணிபுரிந்து வருகிறார். அவர் எவ்வளவு சம்பாதிப்பார் என்று எனக்கு தெரியாது.**

3. **பணம் வாங்கும் போது அவர் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறார் எதற்காக பணம் கடணாக கேட்கிறார் போன்ற விவரங்களை நான் கேட்கவில்லை. கிருஷ்ணாபுரம் கிராமம் ஒரு பகுதி கந்திலி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்டதாகவும் மற்றொரு பகுதி மத்தூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டது ஆகும். எதிரி மணிமாரன் எனது கணவர் மீதும் சித்தப்பா மீதும் புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். எதிரி**

காசோலையை மோசடிசெய்துவிட்டதாக அந்த புகாரை கொடுத்திருந்தார். அந்த புகாரின் மனு எண் எனக்கு தெரியாது.

4. எதிரி மாதம் ரூபார் 50,000 பணம் சம்பாதிக்கிறார் என்றும், அவர் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி என்னிடம் 25.01.2022 ம் தேதி என்னிடம் கடன் வாங்கினார். நான் காசோலைகளை 01.03.2022 ம் தேதி வங்கியில் வசூலுக்கு போட்டேன். 18.02.2022 ம் தேதி எனது கணவரும், சித்தப்பாவும் எதிரிக்கு ரூபாய் 1,00,000 கடன் வாங்கி தருவதாக சொல்லி காட்டு மாரியம்மன் கோவில் அருகில் மது குடித்துவிட்டு எதிரி மணிமாரனை தாக்கிவிட்டு எதிரியிடமிருந்து 4 காசோலைகளை பறித்துக் கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும் அந்த காசோலை எண்கள். இந்த வழக்கில் கண்ட 3 காசோலைகளும் மற்றொரு காசோலை எண். 659383 ஆகும் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதி பொய்யானதாகும். மேற்படி சங்கதியை பொருத்து எதிரி மத்தூர் காவல் நிலையத்தில் 19.02.2022 ம் தேதி புகார் கொடுத்து அதற்கு சி.எஸ்.ஆர் எண். 75/2022 கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. மேற்படி விசாரனையில் காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று தெரியாது. மேற்படி விசாரணையில் காசோலையானது வண்டி டேங்க் கவரிலிருந்து விழுந்துவிட்டதாக காவல் நிலையத்தில் எனது கணவர் தெரிவித்து கையெழுத்து போட்டு வந்துள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி விவரம் தெரிந்தே இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தால் இந்த வழக்கை நான் வாங்கி கொள்ள தாயராக உள்ளேன்.

6. எதிரியை எனக்கு நேரடியாக தெரியாது என்றும் எதிரி என்னிடம் பணம் வாங்கவில்லை என்றும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli
Date: 2023.02.17 17:45:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.